**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.401/2022**
**வழக்கு சாட்சி PW.3**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அன்சாரி | தொழில் | : துணை வட்டாட்சியர் |
| தகப்பனார் பெயர் | : ஜான்பாட்ஷா | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : ஒட்டன்சத்திரம் | வயது | : சுமார் 41 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 27.01.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

<u>முதல் விசாரணையின் தொடர்ச்சி</u>

வழக்கு விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் ? சரிதான். பழனி வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் அலுவலகம் ஏற்படுத்தப்பட்ட போது கடந்த 1996ம் ஆண்டு அனைத்து ஆவணங்களும் வரவழைக்கப்பட்டுவிட்டது என்றால் ? சரிதான். பழனி வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து வரவழைக்கப்பட்ட ஆவணங்கள் ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் தான் உள்ளது என்றால் ? சரிதான். தேவத்தூர் கிராமம், புல எண்.116/3 என்பது சர்கார் தரிசாக இருந்து வருகிறது என்றால் ? சரிதான். தீர்வை ஏற்படுத்தப்பட்ட தரிசு. கடந்த 1983ம் ஆண்டு தங்கராஜ் என்பவர் புல எண்.116/3 என்ற புலத்தினை அனுபவித்து வருவதாக ஒட்டன்சத்திரம் வருவாய் அலுவலர் அறிவிப்பு கொடுத்துள்ளாரா என்றால் ? கொடுத்துள்ளார். அந்த வருவாய் அலுவலர் கொடுத்த அறிவிப்பின் ஜெராக்ஸ் நகல் தான் என்னிடம் காட்டப்பட்ட ஆவணம் என்றால் ? அசல் ஆவணத்தை ஒப்பிட்டு பார்க்கவேண்டும். அசல் ஆவணம் ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருப்பதால் நான் தான் எடுத்து ஒப்படைக்க வேண்டும் என்றால்? சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஜெராக்ஸ் அறிவிப்பில் வருவாய் ஆய்வாளர் தேவத்தூர் என்று தான் கையொப்பம் செய்துள்ளார் என்றால் ? சீல் வைத்து

கையொப்பம் போட்டுள்ளார்கள். அசல் ஆவணத்தை பார்த்தால் தான் சொல்ல முடியும். இந்த அறிவிப்பிற்கு பின்னிட்டு சொத்தானது நாளது வரை சர்க்கார் தரிசாக தங்கராஜ் வசம் தான் இருந்து வருகிறது என்றால் ? 2006ம் ஆண்டு மேற்படி நிலத்தை வேறு ஒரு நபரான வேலன் மாதாரி மனைவி கருப்பாயி என்பவருக்கு நிலத்தை 15.09.2006ம் ஆண்டு நில ஒப்படைப்பு செய்துள்ளார்கள். வாதியிடம் ஏற்கனவே ஒப்படைத்த நிலத்தை அரசாங்கம் திரும்ப எடுத்துக் கொண்டதற்கான ஆவணம் ஏதேனும் எங்களது அலுவலக வசம் உள்ளதா என்றால் ? தற்போது எங்களது அலுவலகத்தில் இல்லை. புலத்தனிக்கை செய்து மேற்படி இடத்தை 4–ம் பிரதிவாதி வசம் ஒப்படைப்பு செய்ததாக ஆவணம் உள்ளதா என்றால் ? கிராம நிர்வாக அதிகாரி, வருவாய் ஆய்வாளர், மண்டல துணை வட்டாட்சியர் ஆகியோர்கள் நிலத்தை புலத்தனிக்கை மேற்கொண்டார்கள். அதற்கான ஆவணங்கள் கோப்பில் உள்ளது. அந்த ஆவணத்தை நீதிமன்றம் வசம் ஒப்படைக்கவில்லை என்றால் ? இல்லை. தற்போது அலுவலக கோப்பில் உள்ளது. சர்வே எண்.116/3 என்ற புலமானது நாளது வரை வாதி தங்கராஜ் என்பவரின் அனுபவத்தில் தான் உள்ளது என்றால் ? சொத்தினை பார்த்தால் தான் தெரியும். தாவா சொத்து தங்கராஜ் என்பவர் வசம் உள்ள நிலையில் நான் சொத்தினை பார்வை செய்துவிட்டு வந்தும் சொத்தை பார்த்தால் தான் சாட்சியம் அளிக்க இயலும் என்று வாதிக்கு ஆதரவாக பொய்யாக சொல்கிறேன் என்றால் ? சரியல்ல. வாதி சொத்தினை சட்டம் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு மேலாக வாதி அனுபவித்து வருவதால் அறிவிப்பு அனுப்பியபிறகும் சொத்தானது நாளது வரை வாதி வசமே இருந்து வருகிறது என்றால் ? புலத்தனிக்கை மேற்கொண்டால் தான் கூறமுடியும். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.01.27 17:58:13 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்